**<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>**

C.O.S. No. 1 of 2023

பெயர் : சிவலிங்கம்

<u>25.8.2025</u>

**<u>பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

முத்திரை கட்டணம் சம்பந்தமாக நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக நான் மான்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சீராய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது, அந்த சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், ஆமாம். இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணைக்கு எதிராக நான் சென்னை உயர்நீதிமன்றத்தை நாடவில்லை என்று சொன்னால், நான் கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்து முடித்துவிட்டதால் நாடவில்லை. Exhibit A4 ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்நீதிமன்றத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால், தவறாகும்.

நான் என் எதிர்வழக்குரையில் 9.5.2022ஆம் தேதி ஒப்பந்தம் போட்டபிறகு வாதிக்கு 19.5.2022ஆம் தேதி ஒரு தொகையை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். நான் அந்த தொகையை வாதிக்கு கொடுத்ததற்கு Exhibit

A4 ஒப்பந்தத்தில் மேல்எழுத்து செய்யப்படவில்லை என்று சொன்னால், எழுதினார்கள், ஆனால் அதன் பிரதியை எனக்கு கொடுக்காமல் மறைத்துவிட்டார்கள். நான் ரூபாய் 11,44,338/– என்ற பெரிய தொகையை நான் சொன்னதுபோல் வாதிக்கு கொடுத்திருந்தால், அதை காசோலை மூலமாகவோ, D.D. மூலமாகவோ அல்லது RTGS மூலமாகவோதான் வாதிக்கு கொடுத்திருப்பேன் என்றும், அதனால் நான் அந்த தொகையை வாதிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். நான் வாதி கடன் பெறுவதற்காகதான் Exhibit A4 ஒப்பந்தத்தை எழுதி கொடுத்தேன் என்று சொல்கிறேன், ஆனால் Exhibit A4 ஒப்பந்தத்திற்காக வாதியிடம் ரூபாய் 11,44,338/– கொடுத்ததாகவும் கூறுகிறேன் அதனால் நான் கூறுவது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது என்று சொன்னால், நான் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ்க்கு கொடுக்க வேண்டிய தொகையைதான் வாதியிடம் கொடுத்தேன். நான் Exhibit A4 ஒப்பந்தத்திற்கு பிறகு ரூபாய் 11,44,338/–ஐ வாதிக்கு கொடுத்திருந்தால், அறிவிப்போ அல்லது பதில் அறிவிப்போ வாதிக்கு அனுப்பியிருப்பேன் என்றும், ஆனால் அப்படி அனுப்பவில்லை என்று சொன்னால், எனக்கு சம்பந்தமில்லாத பெயரில் இருந்துதான் எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள், அதனால் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை.

நான் வாதி கடன் பெறுவதற்காக அவருக்கு நான் எழுதி கொடுத்த Exhibit A4 ஒப்பந்தத்தை வாதி தவறாக பயன்படுத்துவார் என்றும், அந்த Exhibit A4 ஒப்பந்தத்தை செல்லதக்கதல்ல என்று அறிவிக்க வேண்டும் என்றும் நான் நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்று கேட்டால், எடுக்கவில்லை. நான் முதல்நிலை தீர்ப்பாணை அடிப்படையில் வாதிக்கு தொகையை செலுத்தினேன் என்பதற்கு Exhibit B5 அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால், ஆமாம். நான் வாதியிடம் இருந்து கட்டுமானப் பொருட்களை பெற்று அரசுக்கு கட்டிக்கொடுக்க வேண்டிய வேலைகளை செய்து முடித்துவிட்டு, அரசாங்கத்திடம் இருந்து பணத்தை வாங்கிக்கொண்டு, வாதிக்கு பணம் கொடுக்காமல் ஏமாற்றியதால்தான் Exhibit A4 ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால், சரியில்லை. Exhibit A4 ஒப்பந்தம் அமல்படுத்தக்கூடியது என்று சென்னை உயர்நீதிமன்றமே சொன்ன பிறகு, நான் Exhibit A4 ஒப்பந்தத்தை அமல்படுத்த முடியாது என்று இந்நீதிமன்றத்தில் கூறுவது தவறானது என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. நான் வாதிக்கும், எனக்கும் நடைபெற்ற Transactions சம்பந்தமாக தாக்கல் செய்திருக்கும் Exhibit B4 பேங்க் ஸ்டேட்மெண்டில் ஆடிட்டர் அங்கீகாரம் இல்லை என்று சொன்னால், ஆடிட்டர் தனியாக ஸ்டேட்மெண்ட் கொடுத்துள்ளார். Exhibit B3 எனக்கும் வாதி சுப்ரமணியனுக்கும் Transactions இருக்கிறது என்பதை

காண்பிக்கிறது என்று சொன்னால், ஆமாம், அதை வாதி சுப்ரமணியன் கொடுத்தார். Exhibit B3 படி நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகை குறித்து ஒரு பஞ்சாயத்து நடந்து அதன் பேரில்தான் எனக்கும், வாதிக்கும் Exhibit A4 ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால், சரியில்லை. நான் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காமல் ஏமாற்றியதால்தான் மீடியேசன் எல்லாம் நடந்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து நடத்திவருகிறார் என்று சொன்னால், சரியில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால், தவறாகும்.

N.
MURALIDHARAN

Digitally signed
by N.
MURALIDHARAN
Date: 2025.08.25
16:55:24 +0530